# 5 நீர்வாழ் உயிரினவள பேண்தகு முகாமைத்துவம்

## 5.1 நீர்வாழ் உயிரின வளக்கைத்தொழில் சார்ந்த சட்டங்களும் ஒழுங்கு விதிகளும் ஒழுக்க நெறிகளும்

நீர்வாழ் உயிரின வள முகாமைத்துத்தின் மூலம், நீர்வாழ் உயிரின வளங்களை எதிர்கால சந்ததியினருக்காக மீதப்படுத்தி வைப்பது எமது கடமையும் பொறுப்பும் ஆகும். நீர்வாழ் உயிரின வளங்களைப் பேண்தகு மட்டத்தில் நீண்ட காலத்துக்குப் பேணிவருவதற்காக அவ்வளங்களைப் பாதுகாப்பதும் முகாமைசெய்வதும் மிக இன்றியமையாததாகும்.

### பேண்தகு முகாமைத்துவம் (Sustainable Management)

எதிர்காலச் சந்ததியினரும் பயன்படுத்தத்தக்கவாறாக நீர்வாழ் உயிரின வளங்களைப் பயன்படுத்துவதே நீர்வாழ் உயிரினவள முகாமைத்துவம் எனப்படும். பேண்தகு முகாமைத்துவம் பின்வரும் மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டதாகும்.

» பொருளாதாரம்

» சுற்றாடல்,

» தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் தேவைகள்

பேண்தகு முகாமைத்துவத்தின் போது இந்த மூன்று அம்சங்களின் துணையுடன் உருவாக்கப்படும் முறைமையைப் பேணிவருவதும் தளராது வைத்திருத்தலுமே மேற்கொள்ளப்படும்.

### நீர்வாழ் உயிரின வளங்களைப் பேண்தகு நிலையில் முகாமை செய்வதன் முக்கியத்துவம்

- நீர்வாழ் உயிரின வளங்கள் பாதுகாக்கப்படுதல்
- நீர்வாழ் உயிரின வளங்களின் உற்பத்தியை அதிகரித்தல்
- நீர்வாழ் உயிரின வள விருத்தி
- நீர்வாழ் உயிரின வளங்களின் பேண்தகு இருப்பு உறுதி செய்யப்படல்
- அளவுரீதியிலும் பண்பு ரீதியில் உயர்தரமுள்ள விளைபொருள்கள் கிடைத்தல்
- உயிரினப் பாதுகாப்புக்குத் துணையாதல்
- இயற்கையான சூழற்றொகுதிகளும் உயிர்ப்பல்வகைமையும் பாதுகாக்கப்படுதல்

## பேண்தகு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்

நீர்வாழ் உயிரின வளங்களின் பேண்தகு நிலைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் சமூக விரோத, சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் உள்ளனர்.

உதாரணம் : டைனமைற்று போன்ற வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன் பிடித்தல்

செவுள்வலை, மும்மைவலை, இழுவைவலை போன்றவற்றைப் பயன்படுத்தி முருகைக் கற்பார் பிரதேசங்களில் மீன்பிடித்தல்

நீர்வாழ் உயிரின வளங்களைப் பேண்தகு நிலையில் முகாமை செய்வதற்காக பல்வேறு சட்டதிட்டங்களும் ஒழுங்குவிதிகளும் இருப்பது அவசியமாகும். நீர்வாழ் உயிரின வளங்களின் பேண்தகு நிலைக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு மீன் வளங்களை அறுவடை செய்தல் என்பது நீர்வாழ் உயிரினவளக் கைத்தொழிலில் மிக முக்கியமானதாகும். நீர்வாழ் உயிரின வளங்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவாறு உச்ச நன்மை பெறுவதை நோக்காகக் கொண்டு நீர்வாழ் உயிரினவளக் கைத்தொழிலில் ஈடுபடும் போது எதிர்நோக்க நேரிடும் பாதகமான நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதே இந்த சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் நோக்கமாகும்.

**நீர்வாழ் உயிரினவளபேண்தகு முகாமையின் போது சுதேச ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் செல்வாக்குச் செலுத்தும் வகையில் சட்டதிட்டங்கள் (Acts), விதிகள் (Rules), ஒழுங்கு விதிகள் (Regulations) போன்றவை இயற்றப்பட்டுள்ளன.**

### உள்நாட்டு சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்

நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழிலை முகாமை செய்வதற்காக முற்காலத்திலிருந்தே வெவ்வேறு காலப்பகுதிகளில் அரசினால் பல்வேறு சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினவள முகாமைத்துவம் தொடர்பாகத் முதன்முதலில் தயாரிக்கப்பட்ட சட்டம், **1940 இன் 24 ஆம் இலக்க கடற்றொழில் கட்டளைச் சட்டமாகும்.** அக்காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த பிரதானமான கடற்றொழிலான சங்கு பிடித்தலில் முகாமைக்கான **1953 இன் 08 ஆம் இலக்க சங்கு கட்டளைச் சட்டம்** அறிமுகஞ் செய்யப்பட்டது.

நீர்வாழ் உயிரின வளங்களைப் பயன்படுத்தும்போது ஏற்படக்கூடிய இழப்புகளை இழிவளவாக்குவதற்காக உண்ணாட்டு நீர்த்தேக்கங்கள், கடனீரேரிகள், சமுத்திரம் சார்பாக பல்வேறு சட்டதிட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**பேண்தகு முகாமைத்துவம் தொடர்பான சுதேச நீர்த்தேக்கங்கள் சார்ந்த உண்ணாட்டு சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்**

- **1998 இன் 53 ஆம் இலக்க நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டம்** மூலம் நீர்வாழ் உயிரின வள அபிவிருத்திக்கும் முகாமைக்கும் தேவையானதோடு நிறுவனத்தைத் தாபிக்க ஆவன செய்யப்பட்டது.

**பேண்தகு முகாமை தொடர்பாக சுதேச கடனீரேரிகள் சார்ந்த சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்**

- **1981 இன் 07 ஆம் இலக்க கடற்கரையோரப் பாதுகாப்புச் சட்டத்தில்** மீன்கள் மற்றும் சிப்பிகளின் பாதுகாப்பு தொடர்பான உறுப்புரைகளும் கட்டளைகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு வெவ்வேறு குறித்த பிரதேசங்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ள கட்டளைகளும் இடைவிதிகளும் நீர்வாழ் உயிரினவளப் பாதுகாப்புக்கு ஏதுவாக அமைந்துள்ளன.

உதாரணம் : **1911 மே 19 ஆம் திகதிய 6442 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சிறுநகர உடனலப் பாதுகாப்புக் கட்டளைச் சட்ட இடைவிதியில்** மீன் வளங்களைப் பாதுகாப்பதற்கான உறுப்புரைகள் அடங்கியுள்ளன.

**பேண்தகு முகாமைத்துவம் தொடர்பாக சமுத்திரங்கள் சார்ந்த சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்**

- **1996 இன் 02 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீர்வாழ் வளங்கள் சட்டம்**

  இச் சட்டத்தின் நோக்கங்கள் வருமாறு :

  - ★ மீன்பிடி வளங்களைப் பாதுகாத்தல்
  - ★ நீர்வாழ் உயிரின வளர்ப்பை ஒழுங்கு முறைப்படுத்துதல்
  - ★ மீன்பிடிக் கைத்தொழிலையும் நீர்வாழ் வளங்களையும் பேண்தகு நிலையில் முகாமை செய்தல்

அத்தோடு இச்சட்டத்தின் மூலம் பின்வரும் விடயங்கள் தொடர்பான விதிகளும் ஒழுங்கு விதிகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

- ★ மீன்பிடி நடவடிக்கைகளுக்கான அனுமதிப்பத்திரம் பெறுதல்
- ★ சுதேச மீன்பிடிப் படகுகளைப் பதிவுசெய்தல்
- ★ மீன்களையும் ஏனைய நீர்வாழ் வளங்களையும் பாதுகாத்தல்

- ★ நீர்வாழ் உயிரினங்களை வளர்த்தல்
- ★ மீனவர் பிரச்சினைகளின் போது தீர்ப்பாளராகச் செய்தல்
- ★ அதிகாரத்துவமுடைய பதவியணியினரும் அவர்களது அதிகாரங்களும்
- ★ குற்றங்களும் தண்டனைகளும்

## சர்வதேச சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்

சமுத்திரங்களில் பயணஞ் செய்யும் கடற்கலன்கள் (கப்பல்கள்) தொடர்பாக சுதேச மற்றும் சர்வதேச சட்டதிட்டங்களும் விதிகளும் ஒழுங்கு விதிகளும் ஏற்புடையவையாகும். அவை சர்வதேச சட்டங்கள் எனப்படும்.

**சர்வதேச சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும்**

- **2013 இன் 35 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரினவள (திருத்திய) சட்டத்தின்** படி பின்வரும் சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அமைவாக நீர்வாழ் உயிரின வள முகாமைகளுக்கு கட்டுப்படுத்தல்.

    - **ஐக்கிய நாடுகளின் சமுத்திரச் சட்ட இணக்கப்பாடு**

      **1982 டிசெம்பர் 10 ஆம் திகதிய ஜமைக்கா நாட்டின் மொன்டேகோபே நகரில் கைச்சாத்திடப்பட்ட சமுத்திரச் சட்ட இணக்கப்பாடே இதுவாகும்.**

    - **இந்து சமுத்திர டூனா ஆணைக்குழு**

      **1993 நவம்பர் 25 ஆம் திகதிய ரோம் நகரில் ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய அமைப்பினால் (FAO) ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்து சமுத்திர டூனா ஆணைக் குழுவைத் தாபிப்பதற்கான ஒப்பந்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இந்து சமுத்திர டூனா ஆணைக்குழுவே கருதப்படுகின்றது.**

## ஒழுக்க நெறிகள் (Ethics)

யாதேனும் வணிக முயற்சியை அல்லது பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் போது அதற்கென திட்டவட்டமான ஒழுக்கக் கோவையொன்று இருப்பது முக்கியமானதாகும். அவ்வாறானதொரு ஒழுக்கக்கோவையைப் பேணிவருவதன் மூலம் அவ் வணிக முயற்சியை மேலும் சிறப்பாக நடத்திச் செல்லலாம். நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழில் தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய ஓர் ஒழுக்க நெறிக்கோவை உள்ளது.

ஒழுக்கநெறிக் கோவையைப் பின்பற்றாதபோது குறித்த கைத்தொழிலுக்கான கணிப்பு குறைவடையும். அவ்வாறான நிலையில் அக்கைத்தொழிலை நடத்திச் செல்வது கடினமானதாகும். இவ்வாறான ஒழுக்கநெறிக் கோவைகள் வர்த்தமானி அறிவுறுத்தல்கள் மூலமோ மீன்பிடியாளர் சங்க பொதுக்கூட்ட அறிக்கைகள்

வாயிலாகவோ வெளியிடப்படும். நீர்கொழும்புக் கடனீரேரி சார்ந்த ஒழுக்க நெறிக்கோவையொன்று அப்பிரதேசத்தில் வாழும் மக்களால் தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் யாவரும் அதனை பின்பற்றி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

மீன் அறுவடை செய்யும் பிரதேசம், அறுவடை செய்வதற்கான நேர வரையறை, மீன் அறுவடையில் ஈடுபடும் மீனவர் எண்ணிக்கை, பயன்படுத்தும் மீன்பிடி உபகரணங்களும் படகுகளும், அறுவடை செய்யக்கூடிய மீன்விளைச்சலின் அளவைத் தீர்மானித்தலும் கட்டுப்படுத்தலும் போன்றவை இந்த ஒழுக்கநெறிக் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழிலின் போது பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிக் கோவையைப் பின்வருமாறு காட்டலாம்.**

- *நீர்வாழ் உயிரின வள விளைச்சலை அறுவடை செய்யும் போது பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிக்கோவை*

  *நீர்வாழ் உயிரின வள விளைச்சலை அறுவடை செய்யும் போது ஒழுக்க நெறிக் கோவையொன்றினைப் பின்பற்றுவது முக்கியமானது. உவர்நீர் (கடல்) மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரமன்றி நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலுக்காகவும் ஒழுக்க நெறிக் கோவைகள் தயாரிக்கப்படும்*

  *உதாரணம் :*
  - *மீன் பிடிக்கும் கால வரையறைகளைத் தீர்மானித்தல்*
  - *மீன் பிடிப்பதற்காகப் பயன்படுத்தும் வலை வகையைத் தெரிவு செய்தல்*
  - *பெருவலை இழுப்பின் போது ஒதுக்கப்பட்ட நேர வரையறையை அனுசரித்தல்*
  - *முட்டைகளைத் தாங்கியுள்ள நண்டுகளையும் சிங்கி இறால்களையும் பிடிப்பதைத் தவிர்த்தல்*

- *அறுவடைக்குப் பிந்திய தொழினுட்ப முறைகள் தொடர்பாக பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள்*

  *மீன்களைப் பிடித்ததிலிருந்து நுகரும் சந்தர்ப்பம் வரையில் அறுவடைக்குப் பிந்திய தொழினுட்ப முறைகளைக் கையாள்வதோடு அது தொடர்பான ஒழுக்க நெறிகளையும் பின்பற்றுதல் வேண்டும்.*

  *உதாரணம் :*
  - *மீன்களுக்கு காயம் ஏற்படாதவாறு அவற்றைப் பிடிப்பதில் கவனஞ் செலுத்துதல்*
  - *பிடித்த மீன்களைச் சுத்தமான நீரில் கழுவுதல்*
  - *மீன்களிலிருந்து நீக்கப்படும் தேவையற்ற பகுதிகளையும் கழிவுப் பொருள்களையும் உரியவாறு வெளியேற்றுதல்*

- மீன்களை நற்காப்புச் செய்வதற்காக ஃபோமலின் போன்ற இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்
- மீன்களை நற்காப்புச் செய்வதற்காக சுத்தமான பனிக்கட்டி களைப் பயன்படுத்தல்

- நீர்வாழ் உயிரின வளரப்பு தொடர்பாகப் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிகள்

நீர்வாழ் உயிரின வளர்ப்பு இடம்பெறும் நீர்த்தேக்கங்களில் மீன்களைப் பிடிப்பதற்கான காலம் குறிக்கப்பட்டுள்ளது.

உதாரணம் :
- மீன்பிடிச் சங்கங்களாலேயே தீர்மானிக்கப்பட்ட கால எல்லை யினுள் மீன் பிடித்தல்
- நீர்த்தேக்கங்களில் பயன்படுத்தும் வலைகளின் வலைக் கண்ணின் அளவு பற்றி மீனவ சங்கத்தினாலேயே தீர்மானித்தல்
- நீர்வாழ் உயிரின வளர்ப்பு நிலையங்களில் இருந்து நீர்த் தேக்கங்கள் வரை மீன் குஞ்சுகளைக் கொண்டு செல்லல். இதனைக் காலை வேளையில் அல்லது மாலை வேளையில் செய்தல்.

## 5.2 நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழிலின் நிலைப்பாட்டுக்குப் பொருத்தமான முகாமைத்துவ முறைகள்

நீர்வாழ் உயிரின வளங்களைப் பாதுகாக்கும் பொறுப்பும் முகாமை செய்யும் பொறுப்பும் பின்வரும் நிறுவனங்களைச் சார்ந்ததாகும்.

- கடற்றொழில், நீர்வாழ் வள அமைச்சும் திணைக்களமும்
- வன சீவராசிகள் திணைக்களம்

நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழிலின் இருப்புக்காகப் பின்பற்றப்படும் பேண்தகு முகாமைத்துவ முறைகளைப் பின்வருமாறு காட்டலாம்.

### பேண்தகு முகாமைத்துவ முறைகள்

- சட்ட அமுல்படுத்தல் முகாமைத்துவம் (Enforcement management)
- சமுதாயம் சார்ந்த முகாமைத்துவம் (Community based management)
- சமுதாயம் சார்ந்த கூட்டு முகாமைத்துவம் (Co-management)
- சுற்றாடல் சார்ந்த முகாமைத்துவம் (Environmental management)
- விசேட பிரதேச முகாமைத்துவம் (Special area management)

## சட்ட அமுற்படுத்தல் முகாமைத்துவம்

அரச சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகள் மூலம் நீர்வாழ் வளங்களை முகாமை செய்வதே சட்ட அமுற்படுத்தல் முகாமைத்துவம் எனப்படுகின்றது. அச் சட்டதிட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் தயாரிப்பதில் அரசு தலையிட்டுச் செயற்படும்.

மீன் வள முகாமைக்குத் தேவையான சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும், மீன்பிடி, நீர்வாழ் வள அபிவிருத்திச் சட்டத்தின் கீழும், நீர்வாழ் உயிரின வள முகாமைத்துவத்துக்கு தேவையான சட்ட திட்டங்களும் ஒழுங்கு விதிகளும் விலங்குகள் மற்றும் தாவரங்கள் சட்டத்தின் கீழும் விதிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறான சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் இலங்கையில் பின்வரும் நீர்த்தேக்கங்கள் தொடர்பாக மீன்பிடி நடவடிக்கைகள் சார்ந்த கட்டளைகள் நடைமுறையில் உள்ளன.

- தப்போவை நீர்த்தேக்கம்
- மஹவிலச்சிய நீர்த்தேக்கம்
- பதவிய நீர்த்தேக்கம்
- வாகல்கடை நீர்த்தேக்கம்
- பிம்புறுத்தாவை நீர்த்தேக்கம்
- கிரித்தலே நீர்த்தேக்கம்
- கண்டலமை நீர்த்தேக்கம்
- தேவகூவை நீர்த்தேக்கம்
- கொத்மலை நீர்த்தேக்கம்
- சந்திரிகா வாவி நீர்த்தேக்கம்
- வீரவிலை வாவி நீர்த்தேக்கம்
- ரத்கிந்த நீர்த்தேக்கம்



உரு 5.1 கொத்மலை நீர்த்தேக்கம்

மேற்படி நீர்த்தேக்கங்களில் பிற்பகலில் 3.00 மணி தொடக்கம் பிற்பகல் 7.00 மணி வரையில் மாத்திரம் செவுள்வலையைப் பயன்படுத்தி மீன் பிடிக்கலாம். அத்தோடு பிற்பகல் 5.00 மணி தொடக்கம் பிற்பகல் 9.00 மணி வரையிலான காலத்துள் அம்மீன்களைச் சேகரித்தல் வேண்டும். இந்த நீர்த்தேக்கங்களில் ஒருவர் ஒரு நாளில் ஒரு தடவைக்கு மேல் மீன்பிடித்தலில் ஈடுபடுதலாகாது.

மீன்பிடிக் கைத்தொழிலை மேற்கொள்ளும் போது வளங்களை அறுவடை செய்தலையும் அறுவடைசெய்யும் அளவையும் கட்டுப்படுத்துவதே மேற்படி சட்டதிட்டங்களாலும் ஒழுங்கு விதிகளாலும் மேற்கொள்ளப்படுவதாகும். சட்டதிட்டங்களும் ஒழுங்கு விதிகளும் எப்போதும் ஆராய்ச்சிகளை அடிப்படையாகக்

கொண்டே வகுக்கப்பட்டு பொதுச்சட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும். அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தலை நுணுகி நோக்குவதற்கும் உடலுழைப்பையும் அதிக பணத்தையும் செலவிட நேரிடும்.

சட்டதிட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் மீறுவோருக்கு குறித்த சட்டத்தின் கீழ் தண்டனை விதிக்கப்படும். அந்த அதிகாரம் அரசுக்கே உரித்தாகும்.

## சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவம்

குறித்த நீர்வாழ் உயிரின வளங்கள் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் பிரிவினரைக் கொண்டு இங்கு நீர்வாழ் உயிரின வளங்களை முகாமை செய்யப்படும். வரையறைக்குட்பட்ட ஒரு பிரதேசத்தினுள் நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழில் ஈடுபடும் மக்கள் பொதுவான உரிமையைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்திலேயே இம்முறை வெற்றிகரமானதாக அமையும். மரபுரீதியான மீன்பிடி முகாமைத்துவ முறைகள், இலங்கையில் பண்டைக் காலம் முதல் இருந்துள்ளன.

உதாரணம் : நீர்கொழும்புக் கடனீரேரியில் இடம்பெறும் கட்டுவலைக் கைத் தொழிலும் கரைவலைக் கைத்தொழிலும்

**சமுதாயத்தை முதன்மையாகக் கொண்ட முகாமைத்துவத்தின் பொது இயல்புகள்**

- பொதுவான மனப்பாங்கைக் கொண்ட ஒரு மக்கட் குழுவினரின் ஈடுபாடு
- அம் மக்கட் குழு இணக்கப்பாடு தெரிவித்த முகாமைத்துவப் பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்படும்
- வளங்களும் பொறுப்புகளும் சமமாகப் பகிரப்படுதல்
- வரையறைப்பட்ட ஒரு பிரதேசத்தில் மீன்பிடிக் கைத்தொழில் ஈடுபடும், நீர்வாழ் உயிரின வளங்கள் சார்ந்த சமுதாயத்தினராக இருத்தல்
- பிரதேசத்தில் காணப்படும் வளங்களைப் பொறுப்புடன் நுகர்தல்
- சமுதாயத்தினர் தாமாகவே எளிமையான ஒரு முகாமைத்துவப் பொறிமுறையை அமைத்து நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழிலில் ஈடுபடுதல்

**கட்டுவலை மீன் பிடிமுறை - நீர்கொழும்புக் கடனீரேரி**

நீர்கொழும்புக் கடனீரேரி கழிமுகத்தை அண்டி அமைந்துள்ள சில கிராமங்களைச் சேர்ந்த மீனவர் சங்கங்களால் கட்டுவலை மீன்பிடிக் கைத்தொழில் முகாமை செய்யப்படுகின்றது.

கட்டுவலை உரிமை தந்தையிடமிருந்து மகனுக்கு மாத்திரமே கிடைக்கும். குடும்பத்தில் ஆண்பிள்ளை இல்லையெனில் அக்குடும்பத்தின் கட்டுவலை கைத்தொழில் உரிமை முற்றுப்பெறும். புதிய மீனவர்கள் கட்டுவலைக் கைத்தொழிலில் பிரவேசிக்கும் வாய்ப்புக் கிடையாது.

கட்டுவலை குறிப்பாக இறால் பிடிப்பதற்கே பயன்படும். இறால்கள் செறிந்து வாழும் கடனீரேரிப் பிரதேசங்களில் கட்டுவலை பொருத்தி வைக்கப்படும்.

இறால்கள் செறிந்து வாழும் இடங்களில் கட்டுவலை பயன்படுத்தும் போது நிதமும் பிணக்குகள் தோன்ற இடமுண்டு. எனவே, சமய தாபனங்களின் தலையீட்டுடன் கட்டுவலை மீன்பிடித்தலை முகாமை செய்வதற்காக ஓர் உத்தி வகுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய ஒவ்வொரு மீனவர் சங்கத்துக்கும் பிரதானமாகத் தமது கைத் தொழிலில் ஈடுபடுவதற்கென மாதத்தில் சமமான எண்ணிக்கை நாட்கள் ஒதுக்கி வழங்கப் பட்டுள்ளது.

தமது மீன்பிடியாளர் சங்கத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள நாள்களில் அந்தந்த மீனவருக்கு தாம் மீன்பிடிப்பில் ஈடுபடும் இடங்களில் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இந்த உத்தி மூலம் மீனவர்களுக்கு இடையிலான போட்டி தவிர்க்கப்படும் வகையில் முகாமை செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொர் ஆறு நாள்களுக்கு ஒரு தடவை, தமது சங்கத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஒன்று சேர்ந்து திருவுளச் சீட்டு முறையில் இலக்கங்களைத் தெரிவு செய்து கொள்வர். இலக்கம் 1 ஐப் பெற்ற மீனவருக்கு தாம் விரும்பும் இடத்தில் தமது கட்டு வலையைப் பொருத்தச் சந்தர்ப்பமளிக்கப்படும். அவர் தமது அனுபவத்தைக் கொண்டு அதிக இறால்களைப் பிடிக்கலாம் எனக் கருதும் இடத்தைத் தெரிவு செய்து கொள்வார்.

**மேலதிக அறிவுக்காக**

நீர்கொழும்புக் கடனீரேரிப் பிரதேசத்தில் ஏறத்தாழ 2 000 கட்டுவலைகள் உள்ளன. தினமும் அவற்றுள் ஏறத்தாழ 50 கட்டுவலைகள் பொருத்தப்படும். நீர்கொழும்புக் கடனீரேரியில் கட்டுவலை பொருத்துவதற்கு ஏற்ற ஏறத்தாழ பதினேழு (17) இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன. கட்டு வலை பொருத்தப்படும் இடம் ''கட்டுவலைப் பாடு'' எனப்படும்.


**சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட முகாமைத்துவத்தின் சாதகமான அனுகூலங்கள்**

- முகாமைத்துவத்தின் முக்கியத்தைச் சமுதாயத்தினர் விளங்கிக் கொள்ளலும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குதலும்
- மீனவரின் மரபு ரீதியான அறிவு பயன்படுத்தப்படல்
- வளங்கள் தொடர்பான உரிமை சமுதாயத்தினரிடத்தே கட்டியெழுப்படு கின்றமையால் வளங்களை முகாமை செய்வதில் உணர்வு பூர்வமாக ஈடுபடுதல்
- முகாமைத்துவ உத்திகள் சமுதாயத்தின் ஊடாகவே பிறப்பிக்கப்படுதலும் முகாமைத்துவ அதிகாரம் சமுதாயத்துக்காகக் கிடைத்தலும்
- அதிகாரம் ஏனைய தரப்பினருக்கு பரவலாக்கப்படாமை.
- முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கென பணச் செலவு ஏற்படாமை.

## சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்ட கூட்டு முகாமைத்துவம்

இங்கு முகாமைத்துவமானது சமுதாயத்தின் மூலம் செய்யப்பட்டபோதிலும் முகாமைத்துவ முறையைத் தயாரிக்கும் போதும் தீர்மானமெடுக்கும் போதும் அரச துறையினரும் வளங்களை நுகர்வோரும் பல்வேறு வகையில் பங்களிப்புச் செய்யும் ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்தோரும் பங்களிப்புச் செய்வர். இவ்வாறான முகாமையே கூட்டு முகாமைத்துவம் எனப்படுகின்றது.

இங்கு அரச தரப்பினர்கள், மீன்பிடித் துறையைச் சேர்ந்த தரப்பினர்கள் புறவாரித் தரப்பினர் ஆகியோரின் இணைப்பாக்கத்துடன் அதாவது கூட்டான வகையில் நீர்வாழ் உயிரின வள முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும்.



நீர்வாழ் உயிரின வளங்களின் பேண்தகு இருப்பை உறுதிப்படுத்துதற்காக நேரடியாகவோ மறைமுகமாகவோ முகாமைத்துவத்தில் பங்களிப்புச் செய்யக் கூடிய தரப்பினர்களின் கூட்டான பங்களிப்பு இங்கு பெறப்படும். குளங்களில் மேற்கொள்ளப்படும் மீன்பிடிக் கைத்தொழிலின் போதும் சமுதாயத்தை முதன்மையாகக் கொண்ட கூட்டு முகாமைத்துவம் இடம்பெறுவதைக் காணலாம்.

- குளம் சார்ந்த மீன்பிடிக் கைத்தொழிலின்போது மீன்பிடிப் படகுகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றின் பயன்பாடு வரையரைக்குட்படுத்தப்பட்டுள்ளது.
- உண்ணாட்டு நீர்நிலைகளில் மீன்பிடி உபகரணங்களாகத் தடி, தூண்டில், நூல், செவுள்வலை ஆகியவை மாத்திரமே பயன்படுத்தப்படலாம். செவுள் வலையின் வலைக் கண்ணின் அளவும் வரையரைக்குட்படுத்தப்பட்டுள்ளது. (85 mm க்கு மேற்பட்ட அதாவது பெரிய கண்கள் கொண்ட வலைகளையே பயன்படுத்தலாம்)
- எல்லா மீன்பிடி நீர்த்தேக்கங்களிலும் மீனவர்கள் சங்கங்களாக ஒழுங்கமைந் துள்ளனர்
- எல்லா நீர்த்தேக்கங்களிலும் மீன்பிடி நடவடிக்கைகளுக்காக சட்டதிட்டங்கள், ஒழுங்கு விதிகளின்படி அனுமதிப்பத்திரம் பெறுதல் வேண்டும். யாதேனும் நீர்த்தேக்கத்தில் உட்படுத்தும் படகுகளின் எண்ணிக்கையும் வலைகளின் எண்ணிக்கையும் மீனவர் சங்கத்தினரால் தீர்மானிக்கப்படும்.
- வளங்கள் தொடர்பாகத் தீர்மானமெடுக்கும் உரிமையும் அதிகாரமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவ்வளங்களை நுகர்வோரைச் சாரும்.
- சமுதாயத்தை முதன்மையாகக் கொண்ட முகாமைத்துவத்தை விட பரந்த வீச்சில் அடங்கும் கருத்துகள் இங்கு முகாமைத்துத்துக்காகப் பயன்படுத்தப்படும்.

**ஜா - வரிச்சுக் கூடு முறை மீன்பிடிக் கைத்தொழில்**

- இலங்கையில் மேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் காணப்படும் சில கடனீரேரிகள் சார்ந்த பிரதேசங்களில் கையாளப்படும் ஒரு சமுதாயத்தை முதன்மையாகக் கொண்ட முகாமைத்துவ முறையே இதுவாகும்.
- மூங்கில் குழாய்கள், மூங்கில் கீலங்கள், பனையோலைப் பகுதிகள் போன்றவற்றைப் பயன்படுத்தித் தயாரித்த படலை போன்ற அமைப்புக்களைக் கொண்டு ஜா - வரிச்சுக்கட்டு அமைப்பு அமைக்கப்படும்.
- மீனவர்கள் தாம் ஜா - வரிச்சுக்கட்டு அமைப்பு அமைக்கும் இடத்தைத் தெரிவு செய்து தமக்கென ஒதுக்கிக் கொள்வர். வேறு மீனவர்கள் அவ்விடங்களில் ஜா - வரிச்சுக்கட்டு அமைக்க முற்படுவதில்லை.

- மேலும் புதிதாக ஜா - வரிச்சுக்கட்டு அமைப்புக்கள் அமைப்பதற்கு மீனவர் சங்கங்களால் சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது.

- ஜா - வரிச்சுக்கட்டு அமைப்பதற்கான அனுமதிப் பத்திரங்கள் மீன்பிடித் திணைக் களத்தினால் வழங்கப்படும். ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கே இவ்வாறான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும். அமைக்கும் ஜா - வரிச்சுக்கட்டு அமைப்புக்களை அமைக்கும் எண்ணிக்கைகளின் எல்லைகள் ஆகியன குறித்து மீன்பிடிச் சமுதாயத்தினால் தீர்மானிக்கப்படும்.
- இங்கு அரசினால் விதிக்கப்பட்டுள்ள முகாமைத்துவச் சட்டதிட்டங்கள் ஒழுங்கு விதிகளின் படி ஒரு மீனவருக்கு பொதுவாக ஒரு ஜா - வரிச்சுக்கட்டு மாத்திரமே அமைக்கலாம்.
- இங்கு அரசினாலும் மீனவர் சமுதாயத்தினாலும் கூட்டாக தமது மீன்பிடி வளங்கள் முகாமை செய்யப்படும்.

## சமுதாயத்தை முதன்மையாகக் கொண்ட முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

- கட்டுபாட்டுத் தன்மை குறைவான, பொறுப்பு வாய்ந்த, ஒழுங்கமைந்த ஒரு முகாமைத்துவ உத்தியாக இருத்தல்
- சனநாயகத் தன்மையும் பங்குபற்றுகையும் உயர்வாக இருத்தல்
- விளைதிறன்உயர்வானதாவதோடு நிருவகிப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் அதிக பணச் செலவு ஏற்படுவதில்லை
- முகாமைத்துவப் பொறுப்பின் பெரும்பகுதி சமுதாயத்தினரையே சார்ந்திருத்தல்
- பாரம்பரியமான அறிவையும் விஞ்ஞான பூர்வமான அறிவையும் சேர்த்து முகாமைத்துவக் கொள்கைகள் வகுக்கப்பட்டிருத்தல்
- சமுதாயத்தினரே வளங்களின் பொறுப்பாளர்களாக இருத்தல்
- முகாமைத்துவத்துக்காக சட்டத்திட்டங்கள், முறையியல்களை வகுப்பதற்கு சமுகத்தினரதும் வேறு கூட்டுத் தரப்பினர்களதும் பங்கேற்புக் கிடைத்தல்
- முகாமைத்துவத்துக்காக சமுதாயம் பங்களிப்புச் செய்தலும் முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வது இலகுவாகவும் இருத்தலும்

## சமுதாயத்தை முதன்மையாகக் கொண்ட முகாமைத்துவத்தின் நலிவுகள்

- நீர்வாழ் உயிரின வள முகாமைக் கைத்தொழில் சார்ந்த சகல சமுதாயத்தினருக்காகவும் இந்த முறையை நடைமுறைப்படுத்துவது கடினமாதல்
- இம்முறையை சிறிய பிரதேசங்களுக்காக மாத்திரமே பயன்படுத்தக் கூடியதாக இருத்தல்
- இந்த முகாமைத்துவப் பொறிமுறையைத் தாபிப்பதற்காக அதிக காலமும் உழைப்பும் தேவைப்படுதல்
- வள முகாமைத்துவத்துக்காக ஒன்று சேரும் கூட்டுத் தரப்பினருக்கு சீரான வகையில் பங்குபற்றுகைச் சந்தர்ப்பமோ அதிகாரம் பரவலாக்கமோ கிடைக்காமை

- கூட்டுத் தரப்பினர்கள் அதிகரிப்பதால் கருத்து வேறுபாடுகள் உருவாகும் சாத்தியப் பாடு உயர்வாக இருத்தல்

## சுற்றாடல் சார்ந்த முகாமைத்துவம்

நீர்வாழ் உயிரின வளப் பேண்தகு முகாமையின் போது நீர்ச் சூழலை நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழிலுக்கும் பொருத்தமானவாறு முகாமை செய்தல் சுற்றாடல் சார்ந்த முகாமைத்துவம் எனப்படுகின்றது. நீர்வாழ் உயிரின வள முகாமைத்துவத்தின் போது பல்வேறு செயற்பாடுகள் காரணமாக நீருடன் பல்வேறு மாசுகள் சேர இடமுண்டு.

**நீர்வாழ் உயிரின வளக் கைத்தொழில் சார்ந்த சூழலின் நிலவுகைக்கு பாதகமான நிலைமைகள் ஏற்படுவதற்கான காரணங்கள்**

- செயற்கையான உணவு, இரசாயனப் பொருள்கள், மருந்துகள் போன்றவை சேர்ப் பதால் நீர் மாசடைதல்
- இறால் வளர்ப்புக்காகக் கண்டல் சூழலைப் பயன்படுத்தும்போது கண்டல் தாவரங்களைப் பிடுங்கி அப்புறப்படுத்துதல்
- உயிர்ப்பல்வகைமையைப் பாதிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுதல்
  உதாரணம் : மீன்பிடிப்பதற்காக டைனமைற்று (வெடி மருந்து) பயன்படுதல்
- பொருத்தமற்ற, பாதகமான மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தல்

**சுற்றாடல் சார்ந்த முகாமைத்துவத்துக்காக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களும் கட்டளைகளும்**

சுற்றாடல் சார்ந்த முகாமைத்துவத்துக்காகப் பல்வேறு சட்டதிட்டங்களும் கட்டளை களும் பிறப்பிக்கபட்டுள்ளன. அவற்றைக் கொண்டு நீர்ச் சூழலில் நீர் வாழ் அங்கிகளுக்கும் பொருத்தமான நிபந்தனைகள் பேணப்படும்.

- கடற்கரைப் பாதுகாப்புச் சட்டத்தின்படி கடற்கரையோரத்தில் கட்டுமான வேலைகள் செய்வதாயின் அதற்காக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறுதல் வேண்டும். கடற்கரையோரச் சூழலைப் பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.
- நீர்ச்சூழல் தொகுதிகளில் பிற இறால் பேதங்களோ மீன் பேதங்களோ புகுவதைத் தடுப்பதற்காகவும் அவ்வாறானவை இறக்குமதி செய்யப்படுவதைத் தடுப்பதற்கும் பல்வேறு சட்டதிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தாய் இறால்களை இறக்குமதி செய்வதெனின் அதற்காக மீன்பிடி நீர்வாழ் உயிரின வள அபிவிருத்தி அமைச்சின் அனுமதியைப் பெறுவது அவசியமாகும்.



உரு 5.2 கண்டல் சூழல்

- இயற்கையான உணவு வகைகளை நீர்ச்சூழலில் சேர்ப்பதாயின் அதற்காகவும் மீன்பிடி நீர்வாழ் வள அபிவிருத்தி அமைச்சின் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.
- இயற்கையான சதுப்பு நிலங்களை மீட்டெடுத்து அபிவிருத்தி செய்வதைத் தடுப்பதற்கான சட்டதிட்டங்கள் விதிக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் அச்சூழலில் சதுப்பு நிலம் சார்ந்த சூழல் தொகுதிகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.
- அரசுக்குச் சொந்தமான ஒரு காணியில் மீன்வளர்ப்புத் தடாகமொன்று அமைப்பதாயின் அதற்கான அனுமதியைப் பெறுவது அவசியமாகும். கூடவே அங்கு கண்டல் சூழலுக்கோ வேறு இயற்கைச் சூழல் தொகுதிகளுக்கோ தீங்கு விளைவித்தலாகாது.
- இறால் வளர்ப்புச் செயற்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்றினைப் பெறுவது அவசியமாகும். இந்த அனுமதிப் பத்திரத்தை மத்திய சுற்றாடல் அதிகார சபையில் பெறுதல் வேண்டும்.
- வெள்ளநீர் தேங்கும் பிரதேசமொன்றில் பாரிய அளவில் நீர்வாழ் உயிரின வளச் செயற்திட்டமொன்றை ஆரம்பிப்பதாயின் காணி மீட்டல், அபிவிருத்தி செய்தல் அதிகாரசபையின் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

## விசேட பிரதேச முகாமைத்துவம்

வெவ்வேறு பிரதேசங்களின் செல்வாக்குகள் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஒன்றுடனொன்று இணைந்தவாறு அப்பிரதேசத்தில் காணப்படும் வளங்களின் பேண்தகு இருப்புக்குக் காரணமாகும் சந்தர்ப்பங்களில் அவ்வெல்லாத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து அப்பிரதேசத்துக்கான விசேடமான பொதுவான ஒன்றிணைந்த முகாமைத்துவப் பொறிமுறையொன்றினை (Integrated management) நடைமுறைப் படுத்துவதே பிரதேச முகாமைத்துவமாகும்.

இதற்காக சிறிய பிரதேசங்களையே பயன்படுத்தலாம். இலங்கையின் சில பிரதேசங்கள் விசேட முகாமைத்துவப் பிரதேசங்களாக முகாமை செய்யப்பட்டு வருகின்றன.

உதாரணம் :

- ரக்கவே (Rekawa) கடனீரேரி பிரதேச முகாமைத்துவம்
- ஹிக்கடுவை (Hikkaduwa) முருகைக்கற் பிரதேச முகாமைத்துவம்
- நீர்கொழும்புக் கடனீரேரி பிரதேச முகாமைத்துவம்

விசேட பிரதேச முகாமைத்துவத்தின் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படும்.

- கண்டல் சூழல்களைப் பாதுகாத்தல்
- கடனீரேரி நீரும் கடல் நீரும் கலப்பதைத் தடுத்தல்
- நீர்ச்சுழல் மாசடைவதைத் தவிர்த்தல்
- சூழல் நேயமான மீன்பிடி உபகரணங்களையும் படகுகளையும் பயன்படுத்தல்
- மீன்களுக்கு முட்டையிடுவதற்கு இடங்கள் அமைத்தல்
- மீன் குஞ்சுகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல்
- கடற்கரையோர அரிப்பைத் தவிர்த்தல்



உரு 5.3 ஹிக்கடுவைக் கடனீரேரி



உரு 5.4 நீர்கொழும்புக் கடனீரேரி

**ஒப்படை**

நீர்வாழ் உயிரின வளங்களை பேண்தகு நிலைக்காக அது தொடர்பான ஒழுக்கக் கோவையொன்றின் முக்கியத்துவத்தை உதாரணங் காட்டி விளக்குக.